# புதுக்கோட்டை சரக கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளரின் செயல்முறை ஆணை

முன்னிலை:- திரு.ஜே.அப்துல் சலீம்,
துணைப்பதிவாளர்.
(முழுக் கூடுதல் பொறுப்பு)

ந.க.எண்.502/2019 /பதொ நாள்:13.12.2021.

பொருள்: பணியமைப்பு - தமிழ்நாடு அமைச்சுப் பணி - 2018-2019 மற்றும் 2019-2020 ஆம் ஆண்டுகளுக்கான தொகுதி IV-இன் கீழ் இளநிலை உதவியாளர் நேரடிநியமனம் - திரு.மு.இம்ரான்கான் இளநிலை உதவியாளராக பணியமர்த்தம் செய்யப்பட்டது - பணியில் சேர்ந்தது - ஓராண்டு காலம் நிறைவு செய்தது - பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை:
1) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் கடிதம் ந.க.2360/PSD-1/2020 நாள்: 30.05.2020.
2) கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலக இணைப்பதிவாளர் (நிதிமற்றும் வங்கியியல்) கடிதம் ந.க.11800/2020 ப.தொ.3(1)(2) நாள்.24.07.2020.
3) புதுக்கோட்டை மண்டல இணைப்பதிவாளர் செயல்முறை ஆணை ந.க.2488/2020 அ1, நாள்.06.08.2020.
4) திரு.மு.இம்ரான்கான், இளநிலை உதவியாளர் பணிசேர் அறிக்கை நாள்.7.08.2020.

--------

**ஆணை:**

2018-2019 மற்றும் 2019-2020 ஆம் ஆண்டிற்கு தொகுதி IV-இன் கீழ் இளநிலை உதவியாளராக தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நேரடியாக தெரிவு செய்யப்பட்டு பார்வை (2)-இல் காணும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலக இணைப்பதிவாளர் (நிதி மற்றும் வங்கியியல்) செயல்முறை ஆணைப்படி புதுக்கோட்டை மண்டலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை (3)-இல் காணும் புதுக்கோட்டை மண்டல இணைப்பதிவாளர் செயல்முறை ஆணைப்படி சரகத் துணைப்பதிவாளர் புதுக்கோட்டை அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியமர்த்தம் செய்யப்பட்ட திரு.மு.இம்ரான்கான், இளநிலை உதவியாளர் புதுக்கோட்டை சரகத் துணைப்பதிவாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த

நாள் முதல் மாண்பமை சென்னை/ மதுரை கிளை உயர்நீதிமன்றத்தின் 2018-2019 மற்றும் 2019-2020 ஆம் ஆண்டுகளுக்கானதொகுதி - IV-இல் குறிப்பிட்ட பணிகளுக்கான நிலுவையுள்ள நீதிப்பேராணைமனுக்களின் இறுதி முடிவு உட்பட்டது என்ற நிபந்தனையோடு பணிவரன்முறைசெய்து ஆணையிடப்படுகிறது.

| **வ. எண்.** | **பணியாளர் பெயர் மற்றும் பதவி** | **பணியில் சேர்ந்தநாள்** |
|---|---|---|
| 1. | திரு.மு.இம்ரான்கான், இளநிலை உதவியாளர். | 07.08.2020 முற்பகல் |

துணைப்பதிவாளர்(மு.கூ.பொ.)
புதுக்கோட்டை.

**பெறுநர்**

திரு.மு.இம்ரான்கான்,
இளநிலை உதவியாளர்,
துணைப்பதிவாளர் அலுவலகம்,
புதுக்கோட்டை.

**நகல் சமர்ப்பிக்கப்படுகிறது**

1) மண்டல இணைப்பதிவாளர், புதுக்கோட்டை - பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2) தனியரின் பணிப்பதிவேடு.
3) இருப்புக் கோப்பு 2021.